கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

2017(டிசம்பர்)

## HCS 4243 Western Contribution to Hindu Studies

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி-I இலிருந்து மூன்று வினாக்களையும் பகுதி-II இலிருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி – I

1. இந்துப்பண்பாடும் அதனோடு தொடர்புடைய ஆய்வுப்புலங்களும் சர்வதேச பரிமாணத்தினைப் பெறுவதற்கு, மேலைநாட்டவர்களின் பணிகளில் தலையாயது பதிப்புப்பணியாகும். இக்கூற்றினை மேல்வரும் தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.
   - I. இந்தியவியலும் (Indology) மக்ஸ்முல்லரும் (10 புள்ளிகள்)
   - II. The sacred Books of the East என்னும் நூற்தொகுப்பு (15 புள்ளிகள்)

2. மேலைநாட்டவரகள் இந்துக்கற்கை நெறிகள் தொடர்பான ஆய்வுப் புலத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வதற்கு நிறுவனமாக செயற்பட வேண்டிய தேவை இருந்தது. இக்கூற்றினை மேல்வரும் தலைப்புகளை வைத்து மதிப்பீடு செய்க.
   - I. வில்லியம் ஜோன்சும் இந்தியப் பிரவேசமும் (10 புள்ளிகள்)
   - II. ஆசியவியற்கழகமும் (Asiatic society) ஆய்வுப்பணிகளும் (15 புள்ளிகள்)

3. இந்தியவியல் பற்றிய ஆய்வில் ஆதர் லெவலின் பசாமின் (A.L.BASHAM) வியத்தகு இந்தியா (The wonder that was India) என்னும் ஆய்வு நூலின் வகிபாகம் குறிப்பிடற்குரியது. அது தொடர்பாக மேல்வரும் தலைப்புகளைப் பரிசீலனை செய்க.
   - I. பொருள் மரபு பகுப்பு (10 புள்ளிகள்)
   - II. இந்துசமயம் - வழிபாடு பற்றிய நோக்கு (15 புள்ளிகள்)

4. மேலை நாட்டவர்கள் இந்து நாகரிக ஆய்வுப் புலத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு அவர்கள் கீழைத்தேச வர்த்தகக்கம்பனிகளில் வகித்த பதவிகளும்

குறிப்பிடத்தக்க செல்வாக்கினைச் செலுத்தியிருக்கின்றன. இக்கூற்றினை H.T.கோல்புறூக்கினை மாதிரியாகக் கொண்டு மதிப்பிடுக.

I. H.T.கோல்புறூக்கும் வகித்த பதவிகளும் (10 புள்ளிகள்)

II. இந்துநாகரிகம் தொடர்பான ஆய்வுப்புலங்கள் (15 புள்ளிகள்)

## பகுதி II

5. இந்துக்கற்கைகள் பற்றிய மேலைத்தேயத்தவர்களின் ஆய்வில் இந்துக்கட்டடக்கலை பிரசித்தமுடையதாகப் பேசப்படுகின்றது. இந்துக்கட்டடக்கலை தொடர்பான ஆய்வில் பேர்சி புரவுனின் (Percy Brown) பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இக்கூற்றினை ஆராய்க. (25 புள்ளிகள்)

6. இலங்கையின் இந்துசமயம் பற்றிய ஆய்வுகளில் Jems Cartman இன் Hinduism in Ceylon என்னும் நூல் பெறும் முக்கியத்துவத்தினை பரசீலனை செய்க. (25 புள்ளிகள்)